**CC 167/2022**

**அ.சா. 1 பெயர் : சிறுமலை**

**04.05.2026**

**சாட்சி மீண்டும் நீதிமன்றத்தில் ஆஜரானார். குவிமுச பிரிவு 311 ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டதின் பேரில் சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்து வைக்கப்பட்டு எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

1. நான் தான் எதிரிக்கு விசா எடுத்து கொடுத்து வெளிநாடு அனுப்புவதற்காக நடவடிக்கை எடுத்தேன் என்றால் சரிதான். அதற்கு முன்பு வேறு எத்தனை நபர்களை நான் வெளிநாட்டிற்கு அனுப்பி வைத்துள்ளேன் என்றால் யாரும் இல்லை. நான் முதல் தகவல் அறிக்கையில் யாரேனும் வெளிநாடு செல்லவேண்டும் என்றால் உதவி செய்வேன் என்று சொல்லிவிட்டு தற்போது மாற்றி சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. எனது நிறுவனம் பதிவு செய்யப்பட்ட நிறுவனமா என்று நான் புகார் மற்றும் வழக்கு விசாரணையின்போது போலீசாரிடம் கூறவில்லை என்றால் சரிதான். நான் முகவராக இல்லாத போது எதிரிக்கு விசா எடுத்து கொடுத்து வெளிநாடு அனுப்பி வைக்க வாய்ப்பில்லை என்றால் சரியல்ல, நான் நேரடியாக விசா எடுத்து கொடுக்கவில்லை, வேறு டிராவல் ஏஜென்சி மூலமாக எடுத்து கொடுத்தேன்.

2. என்ன வேலைக்கு எதிரியை அனுப்பி வைத்தேன் என்பதை நான் புகார் மற்றும் போலீசார் விசாரணையின்போது குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான். அசாஆ.1 புகாரை நான் தான் எழுதினேன் என்றால் சரிதான். நான் அருப்புக்கோட்டை அரசு மருத்துவமனைக்கு வந்த சமயம் சுயநினைவுடன் தான் இருந்தேனா என்றால் சுய நினைவுடன் தான் இருந்தேன். நான் மருத்துவமனையில் அனுமதித்தவுடன் மருத்துவர் வந்து என்ன நடந்தது என்று கேட்டாரா என்றால் ஞாபகம் இல்லை. நான் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டவுடன் மருத்துவரிடம் என்னை அடையாளம் தெரிந்த 3 நபர்கள் கத்தி மற்றும் கையால் தாக்கியதாக சொல்லிவிட்டு தற்போது எதிரி மற்றும் என்னை தாக்கியதாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல, நான் மருத்துவரிடம் அவ்வாறு கூறவில்லை. என்னை எந்த வகையான கத்தியை வைத்து எதிரி

குத்தினார் என்று நான் புகார் மற்றும் போலீசார் விசாரணையின் போது கூறினேனா என்றால் சரிதான், ஆனால் ஸ்டீல் கத்தியை வைத்து என்னை குத்தினார். என்னை எதிரி கத்தியால் குத்தியதாக கூறும் சமயத்தில் எனது மனைவி எங்கு இருந்தார் என்றால் எனது மனைவி வீட்டிற்குள் இருந்தார். எனது தம்பி மலைமுத்துவின் வீடு எங்குள்ளது என்றால் எனது வீட்டிற்கு அடுத்து வீடு ஆகும்.

3. தற்போது நீதிமன்றத்தில் என்னிடம் காண்பிக்கப்படும் மாதிரி வரைபடத்தில் எனது தம்பியின் வீடு காண்பிக்கப்படவில்லை என்றால் சரிதான். என்னுடன் 108 ஆம்புலன்சில் யார் உடன் வந்தார்கள் எனது மனைவி மற்றும் எனது தம்பி மலைமுத்து உடன் வந்தார்கள். நான் நீதிமன்றத்தில் அளித்த முதல் விசாரணையில் எனது மனைவியும், எனது தம்பியின் மனைவியும் உடன் வந்ததாக கூறியுள்ளேன் என்றால் நான் மனைவி மற்றும் எனது தம்பி என்று கூறினேன் தட்டச்சு பிழையாக இருக்கலாம். என்னை கத்தியால் குத்தியதாக கூறுவதை எனது மனைவி நேரடியாக பார்க்கவில்லை என்றால் சரிதான், நான் கதறும் சத்தம் கேட்டு தான் என்மனைவி வெளியே வந்து பார்த்தார்.

4. என்னை கத்தியால் குத்தியதாக கூறுவதை எனது தம்பி மலைமுத்து உடன் இருந்து பார்க்கவில்லை என்றால் சரியல்ல, எனது தம்பி உடன் இருந்தார். நான் எனது முதல் விசாரணையில் எனது தம்பி ஓடி வந்து என்னை காப்பாற்றியதாக சொல்லிவிட்டு தற்போது எனது தம்பி உடன் இருந்ததாக முன்னுக்கு பின் முரணாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. எதிரியை சரியில்லாத வேலையில் வெளிநாட்டில் சேர்த்துவிட்டதால் அதை குறித்து எதிரி என்னிடம் கேட்டதற்காக எதிரியின் மீது பொய் புகார் கொடுத்துவிட்டேன் என்றால் சரியல்ல. எதிரிக்கும் வழக்கு சம்பவத்திற்கும் சம்மந்தம் இல்லை என்றால் சரியல்ல. வழக்கு சம்பவம் எங்கு வைத்து நடந்தது என்று குறிப்பிட்டு நான் எனது புகார் மற்றும் போலீசார் விசாரணையின்போது சொல்லவில்லை என்றால் எனது வீட்டு வாசலில்ல வைத்து தான் எதிரி என்னை கத்தியால் குத்தினார். வழக்கு சம்பவம் ஒன்று நடைபெறவில்லை என்றால் சரியல்ல.

**நீதிமன்ற கேள்வி**

1. தற்போது நீதிமன்றத்தில் என்னிடம் காண்பிக்கப்படும் கத்தி என்ன கத்தி என்றால் மேற்படி வழக்கு சம்பவத்தின்போது எதிரி என்னை தாக்க

பயன்படுத்திய கத்தி ஆகும். **(இரத்த கறையுடன் கூடிய சில்வர் கத்தி மொத்த நீளம் சுமார் 25 செமீ, கைப்பிடி நீளம் 11 செமீ, ஸ்டீல் பாகம் சுமார் 14 செமீ (மேற்படி சுமார் 25 செமீ, கைப்பிடி நீளம் 11 செமீ, ஸ்டீல் பாகம் சுமார் 14 செமீ கொண்ட சில்வர் கத்தி அசாபொ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது))**

**நீதிமன்ற கேள்வி பொறுத்து குறுக்கு விசாரணை**

1. அசாபொ.1 கத்தியானது பொது வாக காய்கறி வெட்ட தான் பயன்படுத்துவார்கள் என்றால் சரிதான். மேற்படி கத்தியால் மாமிசங்களை வெட்ட இயலாது என்றால் கத்தியை வைத்து குத்தினால் காயம் ஏற்படும். எதிரியின் மீது பொய் வழக்கு தாக்கல் செய்யப்பட வேண்டும் என்று அசாபொ.1 கத்தியானது போலியாக உருவாக்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. மேற்படி கத்தியை எதிரி பயன்படுத்தவில்லை என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை**

**இல்லை**

**CC 167/2022**

**அ.சா. 2 பெயர் : யமுனா**

**04.05.2026**

**சாட்சி மீண்டும் நீதிமன்றத்தில் ஆஜரானார். குவிமுச பிரிவு 311 ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டதின் பேரில் சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்து வைக்கப்பட்டு எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

1. எனது கொழுந்தன் மலைமுத்துவின் வீடு எனது வீட்டிற்கு அருகே அமைந்துள்ளது என்றால் சரிதான். தற்போது என்னிடம் காண்பிக்கப்படும் மாதிரி வரைபடத்தில் எனது கொழுந்தனின் வீடு காண்பிக்கப்படவில்லை என்றால் சரிதான், சம்பவ சமயத்தில் எனது கொழுந்தன் செம்பட்டி என்ஜிஓ காலனியில் குடியிருந்தார், எங்கள் வீட்டிற்கு அருகே குடியிருக்கவில்லை. 10 நிமிட தொலைவில் அவரது வீடு இருந்தது. சம்பவத்தின்போது நான் அழைத்ததன்பேரில் தான் எனது கொழுந்தன் அங்கு வந்தார். சம்பவம் எங்கு வைத்து நடந்தது என்றால் எனது வீட்டிற்கு வெளியே வாசலில் வைத்து நடந்தது.

2. சம்பவத்தின்போது நான் எங்கு இருந்தேன் என்றால் நானும், எனது கணவரும் வீட்டிற்கு வெளியே நின்று கொண்டிருந்தோம். எனது கணவரை கத்தியை வைத்து குத்துவதை நான் நேரடியாக பார்த்தேனா என்றால் பார்த்தேன். எனது கணவர் யாராவது வெளிநாட்டிற்கு போக வேண்டும் என்று கேட்டால் அனுப்பி வைப்பார் என்றால் சரியல்ல. வழக்கு சம்பவத்தின்போது எப்போது எனது கொழுந்தன் அங்கு வந்தார் என்றால் எனது கணவரை குத்தியவுடன் அவர் யாருக்காவது போன் செய்து வர சொல் என்று என்னிடம் கூறினார். அதனால் நான் எனது கொழுந்தன் மலைமுத்துவிற்கு போன் செய்து எங்கள் வீட்டிற்கு வர சொன்னேன். எதிரியை சரியில்லாத வெளிநாட்டு வேலைக்கு அனுப்பிவிட்டு அதிலிருந்து தப்பிப்பதற்காக எதிரியின் மீது பொய் வழக்கு கொடுத்துள்ளோம் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை**

**இல்லை**